# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2325/75 - 2023 අප්‍රේල් මස 01 වැනි සෙනසුරාදා - 2023.04.01**

2325/75 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: GM/DS/HW/2015/2/2/1/133.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2016/HA/218.

மேற்படி விடயம் குறித்து 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதிய 2107/20 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் 07 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலை உங்கள் கவனத்திற்கு அறியத் தருகிறேன்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக பின்வரும் திகதியில் காலை மு.ப. 10.00 மணிக்கு கம்பஹா பிரதேச செயலகத்தில் என் முன் தோன்றும் படியும்,

நேர்காணல் திகதி

| துண்டு இல. | திகதி |
|---|---|
| 01 | 2023.04.28 |

அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஏ. எஸ். எல். குணதிலக,
பிரதேச செயலாளர்,
கம்பஹா.

பிரதேச செயலகம்,
கம்பஹா,
2023, மாச்சு 29.

EOG 04 - 0004



*இவ்அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பி. செ. தொடர்பு இல.: BD/KK/LND2/9/8.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/9/2016/WS/312.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், கந்தகெடிய பிரதேச செயலாளர் பிரிவில் 31B கிராம அலுவலர் பிரிவில் கிவுலேகெதர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடஸ்திரல் வரைபட இலக்கம் 710129 இல் வலய இலக்கம் 01 இல் பத்திர இலக்கம் 03 இல் துண்டு இலக்கம் 142, 144, 145 வரை கூறப்பட்டுள்ள காணிகளுக்கிடையில் முழு விஸ்தீரணத்தில் 0.1012 ஹெக்டயார் ஆன கீழுள்ள 03 காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 142; காணியின் பெயர்: கந்த கெடியஹேன; விபரம்: தோட்டம், சுமார் 20-25 வருடங்கள் பழமையான கலப்பு பயிர்ச்செய்கை உள்ளன; உரிமை கோருபவர்: அரசு, காலஞ்சென்ற ராஜபக்ஷ தேவயலாகே லெய்சாவினால் அனுபவிக் கப்பட்டது; விஸ்தீரணம்: 0.0330 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 141 மற்றும் 143; கிழக்கு: துண்டு இல. 141 மற்றும் 143; தெற்கு: துண்டு இல. 144, 145 மற்றும் 146; மேற்கு: துண்டு இல. 53 மற்றும் 141.

**2. துண்டு இல. 144; காணியின் பெயர்: கந்த கெடியஹேன; விபரம்: தோட்டம், சுமார் 20-25 வருடங்கள் பழமையான கலப்பு பயிர்ச்செய்கை உள்ளன; உரிமை கோருபவர்: அரசு, கந்தகெடிய டிரக் 2/16 பாதையில் வசிக்கும் கொணார முதியன்சேலாகே சந்திராணி பண்டாரவினால் அனுபவிக்கப்பட்டது; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 143; கிழக்கு: துண்டு இல. 143 மற்றும் பூ.அ.வ. 47 இன் துண்டு இல. 2300; தெற்கு: பூ.அ.வ. 47 இன் துண்டு இல. 2300 மற்றும் துண்டு இல. 145; மேற்கு: துண்டு இல. 145, 142, 141 மற்றும் 143.

**3. துண்டு இல. 145; காணியின் பெயர்: கந்த கெடியஹேன; விபரம்: தோட்டம், சுமார் 20-25 வருடங்கள் பழமையான கலப்பு பயிர்ச்செய்கை உள்ளன; உரிமை கோருபவர்: அரசு, கந்தகெடிய பூஸ்ஸகந்த டிரக் 2 இல் வசிக்கும் திசாநாயக்க முதியன்சேலாகே வீரசூரிய பண்டாவினால் அனுப விக்கப்பட்டது; விஸ்தீரணம்: 0.0677 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 141, 142 மற்றும் 143; கிழக்கு: துண்டு இல. 143, 144 மற்றும் பூ.அ.வ. 47 இன் துண்டு இல. 2300; தெற்கு: பூ.அ.வ. 47 இன் துண்டு இல. 2300 மற்றும் துண்டு இல. 146; மேற்கு: துண்டு இல. 146, 53, 141 மற்றும் 142.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு கந்தகெடிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டி. எம். யூ. ஐ. என். கே. திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
கந்தகெடிய.

பிரதேச செயலகம்,
கந்தகெடிய,

EOG 04 - 0005

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.